செ.வெ.எண்.68/ஆகஸ்ட் தேதி : 26.08.2016

**பத்திரிக்கைச் செய்தி**

**தருமபுரி நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**






தருமபுரி நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (26.08.2016) தருமபுரி நகராட்சி கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க நமது மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஒரு அங்கமாக கடந்த 20.08.2016 அன்று தருமபுரி நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 மற்றும் 2 பகுதியில் சிறப்பு துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து மீதமுள்ள பகுதிகளிலும் தெருவில் குப்பைகளை அகற்றுதல், கழிவு நீர் காய்வாய்கள் தூர்வாறுதல், சாலைகளை பெருக்குதல், போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பேரூராட்சி பகுதிகளுக்குட்பட்ட பகுதிகளிலும் சிறப்பு துப்புரவுப் பணி நடைபெற்று வருகிறது. தருமபுரி நகராட்சிக்குட்பட்ட ஒருசில பகுதிகளில் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் கிடைப்பதில்லை என்கிற நிலையை போக்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஏற்கனவே குடிநீர் சம்பந்தமாக ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு அக்கூட்டத்தில் முடிவு செய்தபடி தருமபுரி மாவட்டத்தில் உள்ள 251 ஊராட்சிகளில் 4 ஊராட்சிகளுக்கு 1 அதிகாரிகளை நியமித்து எதனால் மற்றப்பகுதிகளுக்கு முழுமையாக ஒகேனக்கல் குடிநீர் செல்வதில்லை என்பதை கண்டறிந்து குறைகளை நிவர்த்தி செய்து தற்போது கூடுதலாக தண்ணீர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

நகரமன்ற உறுப்பினர்கள் தங்களது பகுதியில் உள்ள குறைகளை மனுக்களாக வழங்கி பொதுமக்களின் நியாயமான கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி ஆணையருக்கு தெரிவித்து குறைகளை களைய வேண்டும். துப்புரவு பணியில் ஈடுபடும் பணியாளர்கள் தங்களது பணிகளை நிறைவாக செய்தி முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக தருமபுரி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டு நகரமன்ற உறுப்பினர்களிடத்திலும், பொதுமக்களிடத்திலும் அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்து மனுக்களைப் பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகரமன்ற தலைவர் திருமதி. சுமதி, துணைத்தலைவர் திரு. ஆறுமுகம், நகராட்சி ஆணையர் திரு. கிருஷ்ணகுமார், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. எம். பொன்னுவேல், தருமபுரி நகராட்சிக்குட்பட்ட நகரமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.